நினைவாலயத்தைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே அங்கே ஒரு பாலத்தை அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இங்கே தன்னந்தனியாக செய்யமுடியுமா செய்யமுடியாதா என்றெல்லாம் சொல்ல முடியாது. அதற்காகத்தான் குழுவை அமைத்திருக்கிறோம். அந்தக் குழுவின் பரிந்துரை என்ன என்று பார்த்து நாம் கருத்துக்களைச் சொல்ல முடியும். அரசு, வேண்டுமானால் இங்கே தெரிவிக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வுகளை அந்தக் குழுவுக்கு அனுப்பி வைக்கலாம்.

மாதவரம் பால் பண்ணை

* வினா எண் 1018—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் மில்க் காலனியில் உள்ள கறவை மாட்டுத் தொழுவங்களில் எத்தனை கறவை மாடுகள் தங்க வசதியுள்ளது?

(ஆ) அவற்றை எத்தனை உரிமைதாரர்கள் பயன்படுத்துகின்றனர்?

(இ) மொத்தம் அங்கு தற்போது உள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:

(அ) 4000 கறவை மாடுகளும், 800 பால் வற்றிய கர்ப்பமுள்ள மாடுகளும் மாதவரம் அரசு பால் பண்ணையிலுள்ள 8 மாட்டுத் தொழுவங்களிலிருக்க வசதியுள்ளது.

(ஆ) தனியார்	14
பட்டதாரி உரிமைதாரர்	7
மொத்தம்	21

(இ) தற்போதுள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கை 241.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, மாதவரம் மில்க் காலனியிலே உள்ள தொழுவத்திலே 4,800 மாடுகள் இருப்பதற்கான எல்லா வசதிகளும் மற்றவைகளும் கட்டடங்களும் இருக்கின்றன. ஆனால் 241 கறவை மாடுகள்தான் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? அந்தத் தொழுவத்திலே 4 ஆயிரம் கறவை மாடுகளைக் கட்டி பராமரிக்கக்கூடிய வகையிலே வருவதற்கு நிறைய விவசாயிகளோ அல்லது பால் உற்பத்தியாளர்களோ தயாராக இருந்தும் அவர்களுக்கு கடன் வசதிகள் போன்ற மற்ற வசதிகள்

செய்து கொடுக்காததால் தான் வராமல் இருக்கிறார்கள், இவ்வளவு செலவு செய்து பெரிய காலனி அமைத்தும் வர வில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அங்கே 4,800 கறவை மாடுகளை வைத்து பராமரிப்புச் செய்து அதிகமான பாலை உற்பத்தி செய்யக்கூடிய முறையிலே அங்கே கடன் வசதி கள் பராமரிப்புக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்; தலைவர் அவர்களே உரிமைதாரர்கள் கடன் பெற்றவுடன் அந்தக் கடனைத் திருப்பிச் சரியான முறையிலே கொடுக்கவில்லையென்றால் உரிமதாரர் களுக்கு வேண்டிய வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுக்க மாட்டார்கள். கடன் பெறுவது மட்டுமல்ல, திருப்பி நல்ல முறையிலே செலுத்தினால் தான் வேண்டிய உதவிகளை செய்து கொடுப்பார்கள். அந்த வகையில் மாதவரத்தில் டி.பி.யினால் மாடுகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. தற்போது பால் பெருக்குப்பண்ணை நோயுற்ற கால்நடைகளினால் கடுமையான பிரச்சினைக்கு ஆளாகியது. எனவே தற்போது உள்ளது போலவே இப்பண்ணை தொடர்ந்து செயல்பட வேண்டுமா என்பது பற்றி பரிசீலிக்க அரசு முடிவு எடுத்து, மாதவரம் பால் பெருக்குப பண்ணை மற்றும் கால்நடை குடியிருப்பு செயல்படும் விதம் குறித்து விரிவாக ஆராயும் பொருட்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையை விரிவாக ஆய்ந்த பின்னர் அரசு தனது அரசாணை எண். 669, நாள் 31-3-1979-ல் தற்போதுள்ள உரிமம் பெற்றவர்களும், பட்டதாரி, மெட்ரிகுலேட் கால்நடை உரிமையாளர்களையும் மட்டுமே தொடர்ந்து இருக்க அனுமதிக்கலாமென்றும், புதிதாக யாரையும் இவ்விடத்தில் அனுமதிக்க வேண்டாமென்றும் ஆணை பிறப்பித்தது.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியுடன் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மேலும் இப்பண்ணை கால்நடை குடியிருப்பு மற்றும் பசுந்தீவனப் பண்ணை, இங்கு பணியாற்றும் ஊழியர்கள் அனைவரையும் பால் பெருக்குத் துறை யிலிருந்து கால்நடை பராமரிப்புத் துறைக்கு மாற்றியது. அடுத்து, எலும்புருக்கி வியாதியினால் இப்பண்ணையிலுள்ள கால் நடைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டு இக்கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. எலும்புருக்கி நோயை விரட்ட ஸ்கீரினிங் குழுவின் ஆலோசனையின்படி ''பாங்கிங் முறைப்படி' நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. அதேபோன்று மற்றப் பகுதிகளில் நிறைய நிலமும் 4000 கால்நடைகள் பராமரிக்க வசதிகளும் இருப்பதால் அவற்றில் நோய்க் கிருமி நாசினி முறை கள் மாற்று வரிசைக் கிரமமாக எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, அந்த நோயினால் பாதிக்கப்பட்டு நிறைய மாடுகள் காணப்படுவதால் அதை இடபொழுது பெருக்கும் வசதி இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 மே 12]

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, மாதவரம் பால்பண்ணையை, பம்பாயிலுள்ள ஆர்ரே பண்ணை மாதிரிப் பெரிதாக்க வேண்டுமென்றுதான் ஆரம்பக் காலத்திலே துவக்கப்பட்டது. இப்போழுது சமபத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களோடு அங்கே போய் பார்த்தோம். அங்கே நல்ல வசதிகனோடு அதிகமான பால் கறக்கும் தரமுள்ள பசுக்களை வளர்த்து வருகிறார்கள். ஆகவே, தனிப்பட்ட உரிமைதாரர்கள் வரவில்லை என்றாலும்கூட அரசே நம்முடைய கால் நடைத் துறையின் மூலமாக அங்கேயுள்ள வசதிகளையும் மற்றவைகளையும் பயன்படுத்தி அதிகமான கறவை மாடுகளை வாங்கி வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பம்பாயிலுள்ள பால்பண்ணையைப் போல இங்கே பெருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இப்பண்ணையைக் கால்நடைப் பராமரிப்புத் துறை பொறுப்பு ஏற்கும்போது 18 உரிமைதாரர்களும் 12 பட்டதாரி உரிமைதாரர்களும் இருந்தனர். புதிய உரிமைதாரர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் கூடாது என்று தடை இருந்ததினால் உரிமைதாரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. சில உரிமைதாரர்கள் தங்களது உரிமத்தை ரத்து செய்துவிட்டுச் சென்றுவிட்டனர். தற்போது 14 உரிமைதாரர்கள் உள்ளனர். பொறுப்பேற்றபின் 5 பட்டதாரி உரிமைதாரர்கள் கால்நடைகளைச் சரிவர பராமரிக்காமல் இருந்ததினாலும் பண உதவி செய்த வங்கிகளுக்குச் சரிவர தொகையினைக் கட்டாததினாலும் அவர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டது. தற்போது 7 பட்டதாரி உரிமைதாரர்கள் உள்ளனர். ஆகவே அவர்களுடைய கால்நடைகளைச் சரியான முறையில் பராமரிக்காத காரணத்தால்தான் அவர்களுடைய உரிமம் ரத்து செய்யப்பட்டது.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கப்பலூரிலுள்ள கோழிப்பண்ணை

* (வினா எண். 1019) திரு என். எஸ். வி.சித்தன்; மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் கப்பலூரிலுள்ள கோழிப்பண்ணை நட்டத்தில் செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:—

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்திலுள்ள கப்பலூர், டாப்கோ குஞ்சு பொரிக்கும் நிலயம் லாபத்தில் இயங்குகிறது. 1,4.80 முதல் 31-1-81 முடிய ரூ. 32,000- லாபம் ஈட்டியுள்ளது.